நிறுவனத்தின் நிதிக்கூற்றானது நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றக் கூற்று, பண ஓட்டக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கான குறிப்பு முதலானவற்றைக் கொண்டுள்ளது. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக (ளுடுPளுயுளு) அமைவாக இக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1.4.2 அளவீடுகளுக்கான அடிப்படை

நிதிக்கூற்றானது வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த கணக்குகளைப் பாதிக்கின்ற பணவீக்கக் காரணிகள் கணிக்கப்பட்டிருக்கவில்லை

1.4.3 ஒப்பிட்டுத் தகவல்

நிதிக்கூற்றுக்களிலுள்ள அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்துப் பெறுமதிகளும் முன்னைய ஆண்டின்படி வெளிப்படுத்தப்பட்டுள்ளது ஆகையால், தரமான, விபரமான தகவல்களை உள்ளடக்கிய ஒப்பீட்டுத் தகல்கள் புரிந்துகொள்ளக்கூடியவை என்பதுடன் நடப்பு ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடத்தக்கவை.

ஒப்பீட்டு இலக்கங்கள் தேவையானபோது நடப்பு ஆண்டின் சமர்ப்பிப்பினை உறுதிப் படுத்துவதற்காக மீளாயப்பட்டுள்ளன.

1.4.4 தொழிற்பாட்டிலிருக்கின்ற, கையாளப்படுகின்ற நாணயம்

நிதிக்கூற்றானது சிரம வாசனா நிதியத்தின் தொழிற்படு நாணய அலகான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றது.

1.4.5 கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள்

தீர்ப்புகள், முடிபுகள் மற்றும் ஊகங்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றின் நிச்சயமற்ற தன்மை காரணமாக, எதிர்கால காலப்பகுதிக்கு முன்கொண்டு செல்லவுள்ள மீதியில் குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ள வேண்டித் தேவைப்படலாம்.

பின்வருகின்ற தீர்மானங்கள் மற்றும் ஊகங்கள், சிரம வாசனா நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கின்ற செயன்முறையில் நிதிக்கூற்றுகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ளன என்று முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) நிலையான சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள வாழ்க்கைக்காலம்

சொத்தொன்றின் பயனுறுதிவாய்ந்த வாழ்நாள், பெறமானத்தேய்வின் முறைமையியல் ஆகியன சிறந்த மதிப்பீட்டின் அடிப்படையில் முகாமைத்துவத்தால் தீமானிக்கப் படுகின்றது. ஆகையால் அவை நிச்சயமற்றமற்றவை.

கணக்கு மதிப்பீடுகள் மற்றும் சிக்கலான தீர்ப்புகள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

ஆ) தொடர்ச்சியான இருப்பு

சில மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகள் என்பதுடன், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் சபையால் தொடர்ச்சியாக தொழிற்படுத்தப்படுகின்ற நிதியமானது, சிரம வாசனா நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பில் குறிப்பிடத்தக்க எதுவித இடருக்குள்ளாகும் வாய்ப்பும் இனங்காணப் பட்டிருக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் நிலையானதன்மையின் அடிப்படையில் தயாரிக்கப்படுவதுடன், கணக்கீட்டுக்கொள்கைகள் காலப்பகுதி முழுவதும் பயனுள்ளதாக இருக்கின்றது.

1.5 சொத்துக்கள் மற்றும் சொத்துக்களின் மதிப்பீட்டு அடிப்படை

1.5.1 சொத்துக்கள், பொறித்தொகுதியும் உபகரணங்களும்

ய) இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் நிறுவகத்தின் எதிர்கால பொருளாதார நன்மையின் அடிப்படையில் அமைந்துள்ளதா அல்லது அதன் செலவு ஆதனம் மற்றும் உபகரணம் பற்றிய அரச துறை கணக்கீட்டு நியமங்கள் இல.07 இற்கமைவாக நம்பிக்கையாக அளவிடப்படக்கூடியதா என்பதுவும், அவற்றின் பெறுமானத்தேய்வினை மற்றும் பெறுமானத் தேய்வுடன் தொடர்புடைய சேதங்களையும் மதிப்பிடுதல், அவற்றின் இயலளவினை தீர்மானித்தலும் தேய்மானமிடுதலும், அவற்றுடன் தொடர்புபட்ட சேதங்கள் ஆகியன இனங்காணப்படுகின்றன.

ஆரம்ப நிலையில், ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணங்களும் அதனது செலவில் மதிப்பிடப்படுகின்றன.

ஆ) செலவு

ஆதனம், பொறித்தொகுதியினதும் உபகரணங்களதும் செலவு ஆகியன, கொள்வனவுச் செலவு, உத்தேசிக்கப்பட்டுள்ள அதனது பயன்பாட்டுக்கு மற்றும் செயலாற்றும் மட்டம் ஆகியவற்றுக்கு நேரடியாக பங்களிப்புச் செய்யக்கூடிய ஏதேனும் செலவு என்பற்றை உள்ளடக்ககின்றது.

ஆதனம், பொறித்தொகுதியினதும் உபகரணங்களதும் செலவிலிருந்தான திரட்டிய பெறுமானத்தேய்வினைக் கழித்ததன் பின்னரான செலவு காட்டப்படுகின்றது.

பரிசுகளாகப் பெறப்பட்டுள்ள சொத்துக்கள் திரட்டிய நிதியத்துக்கு வரவுவைக்கப் படுவதுடன், ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணங்களும் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

இ) மீண்டெழும் செலவு

சொத்துக்களைப் பராமரிப்பதற்கு அல்லது உழைக்கும் இயலுமையை அதிகரிக்கும் நோக்கில் நிலையான சொத்துக்களை பெறுதல், விரிவுபடுத்துதல் அல்லது அதிகரிக்கும் நோக்கத்தக்காக உறப்பட்ட தொடர்ச்சியான செலவீனங்கள் மூலதனச் செலவீனமாகக் கருதப்படுகின்றன.

ஈ) பெறுமானத்தேய்வு

காணி தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் பெறுமானத் தேய்விடப்பட்டபோது, ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணப் பொருட்கள் ஒவ்வொரு பிரிவின் வாழ்க்கைக்காலம் மீது எளிய நேரியல் முறையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றன. சொத்து பயன்படுத் தப்படுகின்ற நேரத்திலிருந்து அது அகற்றப்படும் திகதி வரை பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படுகின்றது

பின்வருகின்ற பெறுமானத் தேய்வு வீதங்களில் பெறுமானத் தேய்மானம் தயாரிக்கப்படுகின்றது.

வாகனங்கள்	10மூ
பொறித்தொகுதி	20மூ
காற்றுச்சீராக்கி	20மூ
செவிப்புல-கட்புல உபகரணம்	25மூ
கணனிகள்	25மூ
தளபாடங்களும் பொருத்துக்களும்	10மூ
அலுவலக உபகரணங்கள்	07.5மூ
மென்பொருட்கள்	20மூ

உ) தொட்டுணரமுடியாத சொத்துக்கள்

தொட்டுணரமுடியாத சொத்துக்கள் பணப் பெறுமதியுடனான பௌதிகச் சொத்துக்கள் அல்லாதவையாகும்.

ஊ) இனங்காண்பதன் அடிப்படை

பௌதீக சொத்துக்கள் அல்லாதவை, சொத்தொன்றின் செலவு மற்றும் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ள பொருளாதார நன்மை அலுவல்களுக்குள் அந்த சொத்துக் களின் ஓட்டத்திலும் பார்க்க அதிகளவு நம்பகமாக மதிப்பிடத்தக்கவையாக இனங்காணப்படுகின்றது.

- . கணக்கீட்டு மென்பொருள்

நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் பெறுகைச் செலவை அளவிடுவதுடன், செலவிலிருந்தான திரட்டிய பெறுமானத் தேய்வினைக் கழிக்கின்றது.

எ) தொட்டுணரமுடியாத சொத்துக்களின் பெறுமானத்தேய்வு

சொத்தின் பயன்பாட்டுத் திகதியிலிருந்து இலகுவான வழியொன்றில் ஆக்கத்திறன் வாழ்க்கைக்காலம் மீது சொத்தினைப் படிப்படியாக பெறுமானத்தேய்விட்டு வருமானக் கூற்றுக்கு சீராக்கம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஏ) சொத்து மீள்மதிப்பீடு

வாகனம் தவிர்ந்த அனைத்து ஆதனம்,பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களது மீள்மதிப்பீடானது, அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட தொழில்சார்தகுதியுள்ள ஆட்களின் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படுகின்றது.(இ.அ.து.க.நி 07)

நிதியத்துக்கு கையளிக்கப்பட்ட முழு 7519 என்ற இலக்கத்தையுடைய கார் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அனைத்து புதிய மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளும் நடப்பு ஆண்டுக்கான நிதிக்கூற்றில் சமர்ப்பிக்கப் படுகின்றன.

ஐ) அகற்றுதல்

ஆதனம், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களது தற்போதைய மதிப்பு, அவை விற்கப்படுகின்றபோது அல்லது எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நலன்களுக்கு வழங்கப் படாதபோது அவற்றை அகற்றுவதற்கு இனங்காணப்படுகின்றது. மூலதனப் பொருட்களை அகற்றுகின்றபோது, இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக் கமைவாக (இ.அ.து.க.நி 07) கணக்கிடப்படுகின்றது.

1.5.2 பங்கு

பங்கானது செலவின் அல்லது தேறிய பெறுகை மதிப்பின்படி தெரிவிக்கப்படுகின்றது. பங்கு எடையின் சராசரி விலையில் உத்தரவாதம் மேற்கொள்ளப்படுகின்றது.

1.5.3 பெறக்கூடிய கணக்குகள்

பெறக்கூடிய கணக்குகள் என்பவை சேகரிக்கப்படமுடியாத அனைத்து பெறுமதி களுக்குமான அனைத்து விலைப்பட்டியலின் மதிப்பாகும். பெறக்கூடிய கணக்குகள் திறைசேரி தொழிற்பாடுகள் மற்றும் நிலையான வைப்புகளிலிருந்து பெறப்பட்ட வட்டிகளை பிரதானமாக கொண்டுள்ளன.

அ)திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து பெறக்கூடிய பணம்

சிரம வசனா நிதிய வருமானத்தின் பிரதான மூலம் 10மூ “ஜாதிக சம்பத” லொத்தரிலிருந்து பெறப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் பெறக்கூடிய லொத்தர் வருமானம், லொத்தர் சபையால் திரட்டிய நிதியத்துக்கு வரவு வைக்கப்படுகின்றது என்பதுடன், நிதியத்தின் வருடாந்த தேவைப்பாடுகளின்படி காலாண்டுக்கொருமுறை விநியோகிக்கப்படுகின்றது.

இது, திரட்டிய நிதியத்தில் சிரம வாசனா நிதியம் என்ற பெயரில் நிதியம் பெறவுள்ள தொகையைப் பிரதிபலிக்கின்றது.

ஆ) நிலையான வைப்பு பணப் பெறுகைகள்

சிரம வாசனா நிதியம் என்ற பெயரின் கீழ் நான்கு அரச வங்கிகளில் பேணப்படுகின்ற நிலையான வைப்புக்கள், ஆண்டுக்காக பெறப்பட்டிருக்க வேண்டிய பணமாகும், இருப்பினும் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை.

15.4 முதலீடுகள்

முதலீடுகள், ஒரு வருடத்திற்கு குறைவான குறுகிய கால முதலீடுகளையும் ஒரு வருடத்திற்கும் அதிகமான நீண்ட கால முதலீடுகளையும் கொண்டுள்ளது. இது. நிலையான வைப்புகளில், மூன்று மாதம், ஆறு மாதம் மற்றும் ஒரு வருடத்திற்கு குறுகிய கால முதலீடுகளையும், அதேபோன்று நீண்ட கால முதலீடுகள் சிரம வாசனா நிதியத்தின் இணையத்தளத்திலும், கணனிமயப்படுத்துள்ள தரவுத்தளத்திலும் மற்றும் சான்றுப்படுத்துதலிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

1.5.5 பணமும் பணத்திற்கு சமனானவையும்

கையிலுள்ள மற்றும் வங்கி வைப்பிலுள்ள பணமும் பணத்திற்குச் சமனானவையையும் கொண்டிருக்கின்றது.

1.6 பொறுப்புக்களும் ஒதுக்கங்களும்

ஐந்தொகை தயாரிக்கப்படுவதற்கான அனைத்து வகையான பொறுப்புகளும் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், ஐந்தொகையில் காணப்படுகின்ற பொறுப்பு களுக்கு போதுமானளவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது, ஆனால் சரியாக மதிப்பிடப்படமுடியவில்லை.

நிதிக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்த ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டி கட்டாயப்படுத்தப்படுகின்ற பொறுப்புகள் நிதிக்கூற்றின் கீழ் நடைமுறைப் பொறுப்புகளாகக் கருதப்படுகின்றன. நிதிக்கூற்றுத் திகதியின் பின்னர் செலுத்த வேண்டிய பொறுப்புகள் நடைமுறையல்லாத பொறுப்புகளாக பேணப்படுகின்றன.

1.6.1 ஓய்வூதிய உதவிப் பொறுப்புகள் மற்றும் எற்பாடுகள்

அ) பணிக்கொடை உதவித் திட்டத்தை வரையறுத்தல்

1983 ஆம் அண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின்படி, சிரம வாசனா நிதியம் பணிக்கொடையைச் செலுத்துவதற்கு பொறுப்புவாய்ந்தது. கணக்கிடப்பட்ட ஒதுக்கங்கள் நிதிக்கூற்றில் காட்டப்படுகின்றன.

ஆ) உதவுதொகைத் திட்டத்துக்கான வரைவிலக்கணம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்.

ஊழியர் சேமலாப நிதி உதவுதொகைகள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு உதவுதொகைகள் செலுத்துவதற்கு தகுதியுள்ள அனைத்து பணியாளர்களும், ஏற்புடைய கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைவாக உரிய உதவுதொகை நிதியங் களால் உள்ளடக்கப்படுகின்றன.

பணியாளரின் மொத்த சம்பளத்திலிருந்து 12மூ ஊழியர் சேமலாப நிதியத்துக்கு நிதியம் பங்களிப்புச் செய்வதுடன், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு 3மூ பங்களிப்புச் செய்கின்றது.

இ) சட்ட உதவிக்கான ஒதுக்கீடு

சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்களிலொன்று, முதலாவது சட்ட உதவி வழக்கு விசாரிக்கப்படுகின்ற போது வழங்கப்படுகையில், இரண்டாவது தவணை வழக்குக் கட்டளை பெறப்பட்டதன் பேரில் செலுத்தப்படுவதாகும். வழக்குகளுக்காக மேற் கொள்ளப்பட்ட இந்த ஒதுக்கங்கள் ஆண்டு காலப்பகுதியில் இறுதி வடிவத்தை எடுக்கவில்லை.

1.7.1 வருமானம் ∴ வருவாய்

பொருளாதார நலன்கள் அல்லது சேவை சாத்தியப்பாட்டின் மொத்த வெளியேற்ற மானது, அறிக்கையிடும் காலப்பகுதியில் வரவுகள் அல்லது நிகரச் சொத்துக்கள் நிறை ஆகியவற்றின் தன்மையில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் வழிவருகின்ற பெறுபேறா கின்றது. வருமானம் மற்றும் வட்டி வருமானம் திரட்டல் அடிப்படையில் கணக்கிடப்படு வதுடன், 'ஜாதிக சம்பத' லொத்தர் மூலமான வருமானம், நிலையான வைப்பிலிருந் தான வட்டி வருமானம் என்பவை பிரதான வருமானங்களாகும்.

1.7.2 செலவினம்

பண ஓட்டங்களின் தன்மை அல்லது சொத்துக்களின் நுகர்வின் தன்மை அல்லது பொறுப்புக்களின் தன்மை காரணமாக அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியில் பொருளாதார நன்மைகளில் அல்லது சேவை நம்பகத்தன்மையில் வீழ்ச்சி.

சிரம வாசனா நிதியத்தின் பணியானது, நிதியத்தின் குறிக்கோள்களைப் பேணுவதில் மற்றும் அதனது மூலதன சொத்துக்களைப் பராமரிப்பதில் மூலதனத்தின் தன்மை மற்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ள பங்கிலாபங்கள் பற்றியதாகும்.

1.8 ஐந்தொகை தயாரிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்

ஐந்தொகை தயாரிக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிடத்தக்களவிலான நிகழ்வுகள் இடம்பெற்றதைக் கவனத்தில்கொண்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.9 பண ஓட்டக்கூற்று

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக (ளுடுீளுயுளு 2) "நேரடியற்ற முறைமை" என்பதைப் பயன்படுத்தி பண ஓட்டக்கூற்று திருத்தப்படுகின்றது.

LSW/B/D/SVF/SR/01/2023 2024 மே 31

தலைவர்
சிரம வாசனா நிதியம்

சிரம வாசனா நிதிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் கண்காணிப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்குறித்த அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்:
1.செயலாளர், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் அமைச்சு
2. செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

LSW/B/D/SVF/SR/01/2023 2024 மே 31

தலைவர்
சிரம வாசனா நிதியம்

சிரம வாசனா நிதிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் கண்காணிப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

சிரம வாசனா நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரியதான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளுக்கு உரிய பொழிப்புகளும் அடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

சிரம வாசனா நிதியத்தின் நிதிக் கூற்றுக்களினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (v];vy;VA+v];v];) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிறுவனத்தின் 2023 இன் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதாக பொருட்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்பட்டிராததுடன், நான் அது தொடர்பாக எவ்விதத்திலும் சான்றுறுதிப்படுத்தல் அல்லது அபிப்பிராயமொன்றை கூறவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்கு உரிய எனது பொறுப்பாக காணப்படுவது மேலே அடையாளங் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறக் கூடியதாக இருக்கும் போது நிதியத்தின் வாசிப்பு மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகைகளில் பெறப்பட்ட எனது அறிவிற்கெட்டியதன் பிரகாரம் போதுமான வகையில் பொருத்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்வதேயாகும்.

நிறுவனத்தின் 2023 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான பிழையான குறிப்பிடுதல் காணப்படுவதாக நான் முடிவுக்கு வந்தால், சரி செய்வதற்காக ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினருக்கு அந்த விடயங்கள் தொடர்பாடல் படுத்தப்பட வேண்டும். மேலும் சரிசெய்யப்படாத பிழையான குறிப்பிடுதல்கள் காணப்பட்டால் அவை அரசியலமைப்பின் 154(6) அரசியலமைப்பின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தை தொடர்ந்துகொண்டு நடத்துவது குறித்த இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாண்மை என்பதோடு, முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கீட்டு வைத்தல் மற்றும் நிதியத்தை தொடர்ந்து நடத்துவதற்கு உரிய விடயங்களை கண்டறிவதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சிரம வாசனா நிதிய நிதி அறிக்கையிடல் தொடர்பான செயன்முறையை சொதனை செய்தல் பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினர்களால் வகிக்கப்பட வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்வாண்மை தீர்ப்புகளை நான் மேற்கொண்டு மற்றும் தொழில்வாண்மை ஐயப்பாட்டுடனும் செயற்பட்டேன். என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான விளக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை கணக்காய்வு செய்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விளக்க வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசீலனையிலிருந்து தெரியும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை நிதியம் பேணி வந்திருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திருந்தது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான வரையறைகளுக்குள் பின்வருவன சொல்லக்கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிய நிர்வாக சபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் நிதியம் சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமை

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது நிதிய நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமை

சட்டதிட்டங்கள்/ஒழுங்குகள் குறிப்பிடல்	அவதானிப்பு
அ) திறைச்சேரி பொது நிறுவனங்கள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் PED 2021/01 தாங்கிய வழிகாட்டல் கைந்நூலில் 5.4 மற்றும் 2022 ஆகஸ்ட் 08 திகதிய இலக்கம் 04/22 தாங்கிய பொது நிறுவன சுற்றுநிருபம்	ஒழுங்குககளுக்கமைய அல்லாது நிதியத்தினால் 2023 வருடத்தில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் ஊடக விளம்பர நிகழ்ச்சி மற்றும் மேடை நாடகத்துக்காக விளம்பர அனுசரணையாளராக ரூ. 545,000 தொகையை செலவிட்டிருத்தல்

ஆ) 1983 இலக்கம் 12 தாங்கிய பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் 6(2) பரிவு மற்றும் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 19	பணிக்கொடை கொடுப்பனவு கணக்கிடல், ஒதுக்கீடு செய்தல் மற்றும் நிதிக்கூற்றுகளை முன்வைத்தல் கணக்கீட்டு நியமம் மற்றும் சட்டத்தின் ஒழுங்குகளுக்கு அமைய மேற்கொள்ளப்படாமை

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் தவிர நிதியத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்காதாக நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக,

அதிகாரம், கடமை மற்றும் செயற்பாடு		அவதானிப்பு
அ) 2019 இலக்கம் 15 தாங்கிய சிரம வாசனா நிதிய(திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தம் 1998 இலக்கம் 12 தாங்கிய சிரம வாசனா நிதிய சட்டம்		
(i)	3.3 உப பிரிவு மற்றும் 3.4 (2 உ) உப பிரிவு பிரகாரம் விதி உருவாக்கல்	சுட்டத்தின் ஒழுங்குகளுக்கு கட்டுப்பட்டு, சபைக்கு, அதன் கூட்ட நடைமுறைகள் மற்றும் கூட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் விதத்தை முறைமைப்படுத்திக் கொள்ளல் தொடர்பாக விதிகளை உருவாக்கும் அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதியாகும் போது கூட உரிய விதிககளை தயாரித்திருக்கவில்லை. அது போல தொழில் ஆணையாளர் நாயகம், தொழில் நியாயச் சபையொன்று, பிணக்கு தீர்ப்பாளர் ஒருவர் அல்லது தொழில் நீதி மன்றமொன்றிலுள்ள வழக்கு நடவடிக்கைக்காக பணியாளர்களுக்கு சட்டரீதியாக நிவாரணத்தை வழங்குவதற்கு, நிதி ரீதியான நிவாரணத்தை வழங்குவதற்கு, அமைய அடிப்படையில் உருவாக்கப்படும் விதிகளால் சபையினால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகைக்கு இணங்க வேண்டிய போதிலும், உரிய விதி 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(ii)	13.1 உப பிரிவு மற்றும் 13.(2அ) உப பிரிவு பிரகாரம் லொத்தர் நடத்தல்	நிதியம் மற்றும் லொத்தர் சபையினால் இணங்கிய பெறக்கூடிய எண்ணிக்கையான லொத்தர் சீட்டுக்கள் மற்றும் சில லொத்தர் வகைகள் சபையினால் ஒவ்வொரு வருடமும் பேணப்பட வேண்டியதுடன், நிதியத்தினால் தேசிய லொத்தர் சபையுடன் அவ்வாறானதொரு இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. நிதியம் மற்றும் லொத்தர் சபை ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு ஏனைய விடயங்களுக்கிடையே, • அவ்வாறு நடத்தப்படும் சீட்டிழுப்பில் வழங்கப்படும் பரிசு தொடர்பாக ,

		• அந்த லொத்தர்களில் உரித்து கோரப்படாத பரிசுகள் தொடர்பாக செயற்படும் விதம் தொடர்பாக , மற்றும் • லொத்தர் சீட்டுகளிலிருந்து கிடைக்கும் பணத்தில் நிதியத்துக்காக ஒதுக்கப்பட வேண்டிய பணத்தொகை தொடர்பாக ஒழுங்குகள் உள்ளிடப்பட வேண்டியிருந்தும், நிதியம் மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகியவற்றிடையே அத்தகைய உடன்பாட்டை எட்டியிராமை
(iii)	14.1 உப பிரிவு பிரகாரம் சட்டவிதியை உருவாக்குதல்	சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பில் அமுலிலுள்ள அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது அதனுடன் இணைந்த விடயங்கள் தொடர்பில் அல்லது இந்த அதிகாரச்சட்டத்தின் ஊடாக விதிகளை உருவாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படும் என கருதப்படும் விடயங்களுக்காக விதிகளை சபையினால் உருவாக்க இயலுமான போதிலும், அந்த விதிகள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை
(iv)	6(ஆ) பிரிவு பிரகாரம் நிதி மற்றும் பிற உதவி வழங்கல்	பணியாளர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனம் முன்னறிவிப்பின்றி மூடப்படும் சந்தர்ப்பத்தில், அந்த சேவை பணியாளர்களுக்கு நிதி மற்றும் வேறு உதவிகள் வழங்குதல் நிதியத்தின் இலக்காக காட்டப்பட்டிருக்கிறது என்றாலும், அவ்வாறானவர்களுக்கு 11 தொழினுட்ப கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த 2023 வருடத்தில் திட்டமிட்டிருந்தாலும் ஒரு நிகழ்ச்சி மட்டுமே நடத்தப்பட்டிருந்தது. அதுபோல் பணியாளர்கள் எதிர்பாராத அனர்த்த நிலைக்குட்பட நேரிடும் பொது மருத்துவ மற்றும் ஏனைய வசதிகளை வழங்கவதோடு இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தும் 2023 வருடத்தில் அத்தகைய இழப்பீடு வழங்கும் செயற்பாடு மேற்கொள்ளப்படாமை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிக்கிணங்க நிதியத்தின் வளத்தை சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைக்குள் உரிய சட்டங்கள், விதிகளுக்கு இணங்க பெறுகைக்குட்படுத்தி பாவனைக்குட்படுத்தபட்டிராமை.

(அ) சிரம வாசனா நிதியயத்தினால் நடைமுறைப்படுத்த வேண்டிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு தேவையான பாடசாலை பைகள் மற்றும் அப்பியாச கொப்பிகளை கொள்வனவு செய்ய ரூ.3,599,679 செலவிடப்பட்டிருந்தாலும் பைகளை வழங்கும் நிறுவனத்தாலேயே

அப்பியாச கொப்பிகளை பொதி செய்யும் வேலைத்திட்டத்துக்காக கொண்டு செல்லல் 2023 திசெம்பர் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தியிருந்தாலும், போதிய ஊழியர்கள் இல்லாமை காரணமாக ஏற்புடைய முறையில் உள்ளக நிர்வாகம் மற்றும் மேற்பார்வை செய்யப்பட்டிருத்தல் அவதானிக்கப்படவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) நிறுவனத்தின் அங்கீகரிக்கபட்டுள்ள ஆளணியினரில் உள்ளக கணக்காய்வாளர் பதவி இருந்தாலும் அதற்கு தேவையான அலுவலர் இல்லாமை காரணமாக உள்ள கணக்காய்வு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

5. பின்னிணைப்பு

01. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்.

- 2023.02.16 டீசயனௌநஒ நிறுவன ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 20 பேருக்கு மட்டும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். டீசயனௌநஒ நிறுவனம், இரத்மலானை மொத்த செலவு ரூ. 1,500.00
- 2023.02.21 ஜேளுழுடு னுயைஅழனௌ தனியார நிறுவன சுமார் 20 ஊழியர்கள் மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். ஜேளுழுடு னுயைஅழனௌ தனியார் நிறுவனம் - நாவல மொத்த செலவு ரூ. 1,500.00
- 2023.02.28 பாணந்துரா யுனிசெலா தனியார் நிறுவன பணியாளர்கள் மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவ உறுப்பினர்கள 42 பேருக்கும் பாணந்துறை நேச்சுரப் நிறுவனத்தின் பணியாளர் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள 22 பேருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல், யுனிசெலா பிரைவேட். நிறுவனம், பானதுறை நேச்சுரப் நிறுவனம், பாணந்துறை மொத்த செலவு ரூ. 8,300.00
- 2023.03.02 கொள்ளுப்பிட்டி 606 கட்டுமானத் தளத்திற்கு (606 வுாந யுனனசநளள ீசழதநஉவ்) சுமார் 15 மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். 606 கட்டுமான தளம், கொள்ளுப்பிட்டி மொத்த செலவு ரூ. 2,300.00
- 2023.03.03 கொள்ளுப்பிட்டியில் உள்ள வுாந யுனளநவெரசந் கட்டுமான தளத்தில் சுமார் 15 மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். வுாந யுனளநவெரசந் கட்டுமான தளம, கொள்ளுபிட்டி மொத்த செலவு ரூ. 2,300.00
- 2023.03.16 ஏகல சிட்ரோ பிரைவேட் லிமிடெட்டின் சுமார் 17 ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். சிட்ரோ பிரைவேட் லிமிடெட் ஜா எல மொத்த செலவு ரூ. 1,500.00
- 2023.03.17 கோனாபல ர்ழஅந டுயனெ ஊழளெவசரஉவழைளெ நிறுவனத்தின் 23 பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல், ர்ழஅந டுயனெ ஊழளெவசரஉவழைளெ கோனபல மொத்த செலவு ரூ. 1,500.00
- 2023.03.22 அவிசாவளை ர்லனசயஅயளெ றுயளாபைெ ீடயவெ, 124 ஊழியர்கர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துதல் அவிசாவளை ர்லனசயஅயளெ றுயளாபைெ ீடயவெ மொத்த செலவு ரூ. 2,500.00
- 2023.03.23 கம்பஹா பியகம முதலீட்டுச் சபையின் 17 பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். பியகம முதலீட்டு சபை, கம்பஹா மொத்த செலவு ரூ. 3,000.00
- 2023.07.11 கட்டுநாயக்க டீழுஐ வலயத்தில் உள்ள குரடபயச டுயமெய நிறுவனத்தின் சுமார் 16 ஊழியர்களுக்கும், ழுமயலய டுயமெய நிறுவன ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 25 பேருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல் இ முயவரயெலயமந டுயமெய யேபையச (ீஎவ) டவன நிறுவனம் மற்றும் கட்டுநாயக்கர் ர்பைடயனெ நிறுவனம் மொத்த செலவு ரூ. 8,680.00 (02 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு)
- 2023.07.14 23 ஊழியர்கள் மற்றும் நேுகுயுனு குழரனெயவழைெ ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர் 23 பேருக்கும் ழேசவா ளுநய (ீஎவ) டவன ் நிறுவன பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்15 பேருக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி- நேுகுயுனு குழரனெயவழைெ , குருநகர் ழேசவா ளுநய (ீஎவ) டவன், யாழ்ப்பாணம் மொத்த செலவு ரூ. 23,938.00
- 2023.07.15 சுயுமுள நுபெநைநசபைெ நிறுவன ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 16 பேருக்கும் 20 சுழடநஒ டீயமந ஆயசவ பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள 20 பேருக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி, கோப்பாய் சுழடநஒ டீயமந ஆயசவ, யாழ்ப்பாணம்
- 2023.07.21 ளுவுயுசு புயசஅநவெள (ீஎவ) டவன இன் ஊழியர்கள் 23 பேருக்கும் மற்றும் ஆயதௌ நுவெநசிசளைநள (ீஎவ) டவன இன் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 15 பேருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். ளுவுயுசு கார்மெண்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட், புத்தல முதலீட்டு வலயம், ஆயதௌ நுவெநசிசளைநள (ீஎவ) டவன், புத்தள முதலீட்டு வலயம் ரூ.12,760.00

- 28 மற்றும் 29.08.2023 மஹாஊவ தேயிலை தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள 08 பேருக்கும் மஹகுடுகல தேயிலை தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 10 பேருக்கும் டுநயனளனயடந தேயிலை தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 25 பேருக்கு மதுரட்ட தேயிலை தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 15 பேருக்கு ளுவ.டநயௌசனளள தேயிலை தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 14 பேருக்கும் ராகல தேயிலை தொழிற்சாலையின் தொழிலாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 13 பேருக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி - ராகல மஹகுடுகல தேயிலை தொழிற்சாலை - ராகல லீட்ஸ்டேல் தேயிலை தொழிற்சாலை - ராகல மதுரட்ட தேயிலை தொழிற்சாலை - ராகல ராகல தேயிலை தொழிற்சாலை - - ராகல ரூ. 55,770.00
- 2023.08.31 டீசயனெைை (ிஎவ) டவன நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 48 பேருக்கும் ருனைஉாநடய (ிஎவ) டவன நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள 10 பேருக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல் டீசயனெைை (ிஎவ) டவன நிறுவனம், கொக்கல ருனைஉாநடய (ிஎவ) டவன. நிறுவனம், கொக்கல மொத்த செலவு ரூ 12,410.00
- 31.08.2023 மற்றும் 01.09.2023 ஆகிய தேதிகளில் குநசனெயடந் தேயிலை தொழிற்சாலையின் பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 23, பேருக்கும் ம் குடைெயலள தேயிலை தொழிற்சாலையின் பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 17 பேருக்கும் சுவுளு ர்ழடனைபௌ நிறுவன ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 26 பேருக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடத்துதல் குநசனெயடந தேயிலை தொழிற்சாலை - கலபட குடைெயலள் தேயிலை தொழிற்சாலை - கலபட சுவுளு ர்ழடனைபௌ - ஹிடெல்லான மொத்த செலவு ரூ. 14,950.00
- 2023.09.06 ளுாயிழழசதை ீயடடழதெை டுயமெய நிறுவனத்தின் 17 ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கும் ஐவுஊ ழுநெ ஊழடழஅடிழ ழுநெ திட்டத்தின் 15 ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். ளுாயிழழசதை ீயடடழதெை டுயமெய நிறுவனம் - மேற்கு வலயம் ஐஐ ஐவுஊ ழுநெ ஊழடழஅடிழ ழுநெ ீசழதநஉவ நிறுவனம் - மேற்கு வலயம் ஐஐ மொத்த செலவு ரூ. 5,525.00 (02 திட்டங்களுக்கு)
- 2023.09.11 மஹரகம ஹைட்ராமானியா (பிரைவேட்) கம்பனியின் 100 பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். ர்லனசயஅயயை (ிஎவ.) நிறுவனம் - மஹரகம மொத்த செலவு ரூ. 5,710.00
- 2023.09.19 எஹெலியகொட லங்கா சுற்றாடல் தயாரிப்புகள் நிறுவகத்தின் 13 பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டம் நடத்துதல் லங்கா சுற்றாடல் தயாரிப்புகள் நிறுவகம் - எஹெலியகொட ரூ. 21,110.00

- 26.09.2023 மற்றும் 27 புழடனநெ டீரனள ருஎய வுநய குயஉவழசல ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 18 பேருக்கும் யுடஉழய (ிஎவ) டவன இன் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 21 பேருக்கும் முநைெடடயெ நுளவயவந தோட்ட ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் நேற டீரசபா நுளவயவந ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 21 பேருக்கும் ருஎய புசநநடெயனெ நுளவயவந ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 8 பேருக்கும் ர்னைெயபபயடய நுளவயவந ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 20 பேருக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடாத்துதல் ரூ. 17,572.00
- 2023.10.04 கொக்கல முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் பல தொழிற்சாலைகளின் 99 பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் - கொக்கல ரூ. 24,440.00
- 2023.10.12 பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் பல தொழிற்சாலைகளின் 110 பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் - பியகம ரூ. 31,430.00
- 2023.11.08 மற்றும் 15. இரத்மலானை, பனாலுவ மற்றும் ஹோமாகம கைத்தொழில் வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட 12 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் இரத்மலானை, பனாலுவ மற்றும் ஹோமாகம வலயங்கள் ரூ.54,494.00
- 2023.12. குசநநடயெ நுவெநசிசளைநள ிஎவ டவன நிறுவனத்தின் 50 பணியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துதல். குசநநடயெ நுவெநசிசளைநள ிஎவ டவன நிறுவனம் மாத்தறை ரூ. 75,540.00

02. கல்வி உதவித் திட்டங்கள்

- 2023.05.20 குறைந்த வருமானம் கொண்ட உழைக்கும் குடும்பங்களில் படிக்கும் 500 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. படேபொல தேசிய பாடசாலை - காலி ரூ.1,612,094.94
- 2023.07.20 குறைந்த வருமானம் கொண்ட உழைக்கும் குடும்பங்களில் கல்வி கற்கும் 900 சிறார்களுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. முற்றவெளி விளையாட்டரங்கம் - யாழ்ப்பாணம் ரூ. 3,935,519.57
- 2023.08.31 குறைந்த வருமானம் கொண்ட உழைக்கும் குடும்பங்களில் படிக்கும் 500 குழந்தைகளுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. பிரதேச செயலகம் - மடுல்ல ரூ. 1,774,147.83
- 2023.10.01 குறைந்த வருமானம் கொண்ட உழைக்கும் குடும்பங்களில் படிக்கும் 400 சிறார்களுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. பிரதேச செயலக கேட்போர் கூடம் - உடுகம ரூ. 1,292,516.11
- 2023.11.25 குறைந்த வருமானம் கொண்ட உழைக்கும் குடும்பங்களில் படிக்கும் 400 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. நகரசபை கேட்போர் கூடம் - பிபில ரூ. 3,416,192.00
- 2023.11.29 குறைந்த வருமானம் கொண்ட உழைக்கும் குடும்பங்களில் படிக்கும் 145 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. தெரேசா பெண்கள் கல்லூரி - எல்பிட்டிய ரூ. 884,500.00
- 2023.11.30 அனர்த்த நிவாரணத் திட்டம் மற்றும் பாடசாலை உபகரண விநியோகத் திட்டம் - அம்பாந்தோட்டை
- 2023.12.03 குறைந்த வருமானம் கொண்ட உழைக்கும் குடும்பங்களில் படிக்கும் 400 சிறார்களுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. காமினி கல்லூரி, பெந்தர ரூ. 2,434,720.0
- 08. 2023.12.05 மற்றும் 06 அனர்த்த நிவாரணத் திட்டம் - அனுராதபுரம், புத்தளம் மற்றும் குருநாகல்
- இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் உழைக்கும் குடும்பங்களில் படிக்கும் 855 பிள்ளைகளக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. பிரதேச செயலகம் - அனுராதபுரம் புத்தளம் பிரதேச செயலகம் - குருநாகல் ரூ. 5,256,530.00
- 2023.12.11 அனர்த்த நிவாரணத் திட்டம் - மாத்தறை இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட உழைக்கும் குடும்பங்களில் கல்வி கற்கும் 285 சிறார்களுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. மாத்தறை பிரதேச செயலகம் ரூ. 875,118.15

சிரம வாசனா நிதியம்,

இல.97,

ஜாவத்தை வீதி,

கொழும்பு-05.

தொலைபேசி இல. : 011 2588936

தொலைநகல் இல. : 0112588937